மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கோத்தகிரி.
முன்னிலை: திருமதி.க.அமிர்தம், **B.Sc.,LL.B.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கோத்தகிரி,
2026-ம் ஆண்டு ஜூலை மாதம் **06**-ம் நாள் திங்கட்கிழமை
சு.மு.வ எண். **220/2024**

புகார்தாரர்	:	இராமசந்திரன், த.பெ. காளியப்பன், க.எண்.4/1320, இந்திரா நகர், கேர்கம்பை, மிளிதேன் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.
எதிரி	:	பிரவீன் குமார், த/பெ.சற்குணராஜ், க.எண்.156, விநாயகர் கோவில் முதல் தெரு, வண்ணாரபேட்டை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.
குற்றம்	:	மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138
வனையப்பட்ட குற்றச்சாட்டு	:	விளக்கிக் கூறப்பட்டது.
தண்டனை குறித்த விவரம்	:	மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் எதிரி தண்டிக்கப்படுகிறார்.
முடிவு		i) முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளியென இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 278 (2) BNSS ன் கீழ் எதிரிக்கு ஆறு (6) மாதகாலம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறது. ii) எதிரி இந்த தீர்ப்புரை பகரப்பட்டதிலிருந்து இரண்டு மாதக்காலத்திற்குள் (05.09.2026) ரூ. 2,00,000/-ஐ பிரிவு 395(3) BNSS-ன் கீழ் நஷ்ட ஈடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையை அடுத்தடுத்து அனுபவிக்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் 04.05.2024 ம் தேதியன்று சுருக்குமுறை வழக்கு எண்.220/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னிலையில் இறுதியாக 24.06.2026ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில்

வழக்கறிஞர் திரு.S.E.ஸ்ரீதரன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.அபர்ணா அகர்வாலா அவர்களும், ஆஜராகி செய்த வாதங்களை கேட்டும், சாட்சி மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

//தீர்ப்புரை//

இந்த வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்ககோரியும், நஷ்ட ஈடு செலுத்தகோரியும், தாக்கல் செய்யப்பட்டது.

2. <u>புகாரின் சுருக்கம்:</u>

இந்த வழக்கின் புகார்தாரர் இராமசந்திரன் என்பவரிடமிருந்து, எதிரி பிரவீன் குமார் தன்னுடைய குடும்ப அவசர தேவைக்காக ரூ.2,00,000/-த்தை கடனாக கடந்த 09.01.2024ம் தேதியன்று பெற்றுக்கொண்டதாகவும், அந்த கடனை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி கடந்த 12.02.2024ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கமிஷனர் ரோடு, உதகமண்டலம் கிளைக்குரிய காசோலை எண்.346862யை புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், அந்த காசோலையை புகார்தாரர் கடந்த 13.02.2024ம் தேதியன்று அவரது வங்கிக்கணக்குள்ள பேங்க் ஆப் பரோடா, கோத்தகிரி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது, எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லையென்ற காரணத்தால் கடந்த 15.02.2024ம் தேதியன்று காசோலை திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திரும்பியது குறித்து கடந்த 29.02.2024 ம் தேதியன்று புகார்தாரரின் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பியதை எதிரி 12.03.2024 ம் தேதியன்று எதிரி பெற்றுக்கொள்ளாமல், திருப்பி அனுப்பியதாகவும், எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்துக்கொண்டே காசோலை கொடுத்து மோசடி செய்து ஏமாற்றியுள்ளார். எனவே, எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138ன் கீழ் தண்டிக்கதக்க நடவடிக்கை எடுத்து 395(3)-ன் படி இழப்பீடு பெற்றுத்தரக்கோரி கோரப்பட்டது.

3. வழக்கின் அனைத்து ஆவணங்கள், புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண

பத்திரிக்கை, குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

4. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு வழக்கு ஆவணங்களில் நகல்கள் வழங்கி, யோசிக்க நேரம் கொடுத்து BNSS பிரிவு 274-ன் குற்றத்தை குறித்து வினவியபோது, (Substance of Accusation) பொய் வழக்கு எனவும், தான் குற்றவாளி இல்லையென மறுக்கவே எதிரியின் மீது மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். புகார்தாரர் தரப்பில் பு.த.சா.ஆ.**1** முதல் பு.த.சா.ஆ.**4** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரியின் தரப்பில் வழக்கை மறுத்து நிரூபிக்க போதுமான சாட்சிகள் உள்ளதாக கூறியுள்ளபோதிலும், சாட்சியங்களை ஆஜர்படுத்தவில்லை என்பதால், எதிரியின் தரப்பு சாட்சியம் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில், புகார்தாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டதில், புகார்தாரரிடமிருந்து ரூ.2,00,000/- கடனாக எதிரி பெற்றுக்கொண்டு, கடனை திருப்பிச் செலுத்தும் பொருட்டு, கடந்த 12.02.2024 ம் தேதியிட்ட ரூ.2,00,000/-க்கான காசோலை எண் “346862” என்ற ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, உதகமண்டலம் கிளைக்கான காசோலை பு.த.சா.ஆ.**1** கொடுத்ததாகவும், அக்காசோலையானது வசூலுக்காக கடந்த 15.02.2024 ம் தேதியன்று எதிரியின் வங்கி கணக்கில் செலுத்தியபோது, போதிய பணமில்லையென்ற காரணத்தோடு ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.**2** திருப்பப்பட்டதாகவும், காசோலை திரும்பியது குறித்து 29.02.2024 ம் தேதியன்று புகார்தாரர் அவருடைய வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு பு.த.சா.ஆ.**3** அனுப்பியதை, எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் அஞ்சல் உறை பு.த.சா.ஆ.**4** திருப்பப்பட்டதாகவும், எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லையென்று தெரிந்துகொண்டே காசோலை கொடுத்து மோசடி செய்து ஏமாற்றியுள்ளார். எனவே, எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138 ன் கீழ் தக்க நடவடிக்கை எடுத்து உகந்த பரிகாரம் வழங்க

கோரப்பட்டது.

7. புகார்தாரர் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகளை எடுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1) (பி)ன் கீழ் வினவியபோது, பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க போதுமான சாட்சிகள் உள்ளதென கூறியுள்ளபோதிலும், எதிரியின் தரப்பு சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால், நீதிமன்றத்தால் தன்னிச்சையாக முடிக்கப்பட்டு இருதரப்பு வாதத்திற்கு உத்தரவிடப்பட்டது.

8. <u>புகார்தாரர் தரப்பில் முன்வைத்த வாதம்</u> **:**

புகார்தாரர் தரப்பில், எதிரி புகார்தாரரிடம் அவரது குடும்ப தேவைக்காக, ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு கடன் தொகையை செலுத்தும் விதமாக காசோலையை பூர்த்தி செய்து கொடுத்ததாகவும், அதனை புகார்தாரர் கடந்த 13.02.2024 ம் தேதியன்று காசோலையை வங்கியில் செலுத்தியபோது, எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லையென்ற காரணத்தால் காசோலை திருப்பப்பட்டுள்ளதாகவும், எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லையென்று தெரிந்துகொண்டே காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதால், மாற்றுமுறை ஆவண சட்டம் 138 ன் கீழ் தண்டிக்கதக்கவர் என்றும், எதிரி வழக்கு காசோலையையும் அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தை பொறுத்தவரை எதிரி பிரிவு 118 மற்றும் 139 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்காத பட்சத்தில் சட்டப்படியான கடன் அல்லது கடன் பொறுப்பிற்காக கொடுத்த காசோலை என்று அனுமானிக்கமுடியும் என்பதால், எதிரிக்கு தண்டனை அளிக்கவேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

9. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால்</u>**:**

1) இந்த புகாரானது நிலைக்கதக்கதா?

2) வழக்கிடை காசோலையை பொறுத்து எதிரிக்கு சட்டப்படியான செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு இருந்தது என்பதை புகார்தாரர்

நிரூபித்து இருக்கிறாரா?

3) புகார்தாரர் எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 138 ன் கீழான குற்றத்தை நிரூபித்து இருக்கிறாரா?

10. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை எண்</u>**<u>:-(1)</u>**

1) <u>இந்தப் புகாரானது நிலைக்கதக்கதா</u>**<u>?</u>**

இந்த வழக்கின் புகார்தாரரிடமிருந்து, எதிரியின் குடும்ப அவசர தேவைக்காக ரூ.2,00,000/-த்தை கடனாக 09.01.2024 ம் தேதியன்று பெற்றுக்கொண்டு அதனை திருப்பி செலுத்தும் விதமாக 12.02.2024 ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, உதகமண்டலம் கிளைக்குரிய காசோலை எண்.346862 யை புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், அந்த காசோலையை புகார்தாரர் கடந்த 15.02.2024 ம் தேதியன்று அவர் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பாங்க் ஆப் பரோடா, கோத்தகிரி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

a) காசோலையில் உள்ள தேதி	:	12.02.2024
b) காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்ட நாள்	:	13.02.2024
c) காசோலை திருப்பப்பட்ட நாள்	:	15.02.2024
d) வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்	:	29.02.2024
e) அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சலக உறை மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை	:	12.03.2024
f) புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்	:	15.02.2024
g) புகார் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் 04.05.2024		04.05.2024

மேற்கண்ட அனைத்து சங்கதிகளையும் பரிசீலனை செய்யும்போது, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கால வரையரைக்குள் (Statutory period of limitations) இப்புகாரின் வழக்கு மூலமும் ஏனைய பிற சங்கதிகளும் சரியான முறையில் பின்பற்றப்பட்டுள்ளதா? என்று பார்த்தால், மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 138 ன் பிரிவின் கீழான நடைமுறைகளை பின்பற்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் புகார்தாரரின் வசிப்பிடம் மற்றும் அவரது வங்கிக் கணக்குள்ள வங்கி பண பரிவர்த்தனைகள் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆகியவை கோத்தகிரி காவல்

நிலைய சரகத்திற்கு உட்பட்டது என்பதால், இப்புகாரானது இந்நீதிமன்றத்தின் நிலவரை அதிகார வரம்பிற்குள் (J**urisdiction)** அமைந்துள்ளது. எனவே, புகாரானது இந்நீதிமன்றத்தால் புலன் கொள்ளுதலுக்கு (**Taking cognizance**) எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் தாக்கல் செய்ய குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள் சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு மூலம் **(Cause of Action**) சரியான முறையில் அமைந்துள்ள காரணத்தினாலும், இப்புகாரின் சங்கதிகள் இந்நீதிமன்றத்தின் நில அதிகார வரம்பிற்குள் **(Jurisdiction)** அமைந்துள்ளதாலும், இப்புகாரானது நிலைக்கத்தக்கதென்று இந்நீதிமன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை எண்.1வை புகார்தாருக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

11. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை எண்-**(2)**</u>

<u>**2)**வழக்கிடை காசோலையை பொறுத்து எதிரிக்கு சட்டப்படியான செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு இருந்தது என்பதை புகார்தாரர் நிரூபித்து இருக்கிறாரா**?**</u>

இவ்வழக்கில் பு**.**த**.**சா**.**ஆ**.1** ஆனது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லையென்ற காரணத்தால் வழக்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் வழக்கு காசோலை பு**.**த**.**சா**.**ஆ**.1** ல் கண்டுள்ள காசோலையானது எதிரியால் கொடுக்கப்பட்டுள்ளது என்று ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்ப மெய்ப்பிக்கும் சுமையை (Initial Burdern of proof) புகார்தாரர் நிரூபித்து விட்டதாகவும், மேற்படி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 139 மற்றும் 118(a) ன் கீழ் காசோலையை கொடுத்தவர் அல்லது எதிரி (Drawer of the cheque) அதிலுள்ள அவரது கையொப்பத்தை ஒப்புக்கொள்ளும் சமயத்தில் அவர் முரண்பாட்டை மெய்ப்பிக்காத வரையில், (Until the contrary is proved or unless the contraryis proved) மேற்படி சட்டத்தின் பிரிவு 139ன் கீழ் காசோலையை பெற்றவர் அல்லது புகார்தாரர் அக்காசோலையை எதிரியிடமிருந்து சட்டப்படியான செயல்படுத்தக் கூடிய கடன் அல்லது கடன் பொறுப்பிற்காகவே பெற்றதாக அனுமானிக்கப்படும். மேற்படி பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனுமானமானது மறுதளிக்ககூடிய அனுமானம் (Rebutable Presumption) என்று

கூறலாம். இந்த அனுமானங்களை எதிரி சாட்சியம் அல்லது சான்றாவணத்தின் மூலம் மறுத்தளித்து தனது தரப்பினை நிரூபிக்கலாம், எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தினை ஒப்புக்கொண்ட காரணத்தினால் மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 118 மற்றும் 139ன் கீழான அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வா.சா.1ன் சாட்சியத்தில், புகார்தாரரிடமிருந்து ரூ.2,00,000/- ம் கடனாக எதிரி பெற்றதாகவும், அந்த கடனை திருப்பிச் செலுத்தும் பொருட்டு கடந்த 09.01.2024 ம் தேதியிட்ட ரூ.2,00,000/- க்கான காசோலை எண்“346862” என்ற கொண்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, உதகமண்டலம் கிளைக்கான காசோலை பு.த.சா.ஆ**.1** கொடுத்ததாகவும், அக்காசோலையானது வசூலுக்காக கடந்த 15.02.2024ம் தேதியன்று செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லையென்ற காரணத்தோடு ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ**.2** திருப்பப்பட்டதாகவும், காசோலை திரும்பியது குறித்து 29.02.2024ம் தேதியன்று புகார்தாரர் அவருடைய வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு பு.த.சா.ஆ**.3** அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை எதிரி 12.03.2024 ம் தேதியன்று பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் உறையுடன் கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ**.4** ஆகவும், குறியீடு செய்து எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்து காசோலை கொடுத்து மோசடி செய்து ஏமாற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. எதிரியிடமிருந்து எவ்வாறு வழக்கு காசோலையானது புகாரர்தாரரிடம் சென்றது என்பது குறித்து, எதிரியின் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோது, முன்வைக்கப்பட்ட வாதம் புகார்தாரரை எதிரிக்கு யார் என்று தெரியாது. எதிரியின் சித்தப்பாவிற்காக வாங்கிய வாகனம் சம்பந்தமாக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரியின் பெயரே புகார்தாரருக்கு தெரியாது என்பதால்தான் குறுக்கு விசாரணையில், பிரேம் குமார் என்று கூறியுள்ளதாகவும், எதிரியின் பெயரே புகார்தாரருக்கு சரிவர தெரியாத நிலையில், குடும்ப செலவிற்காக ரூ.2,00,000/- பணம்

கொடுத்ததாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும், பொதுவாக தெரியாத நபருக்கு, யாரும் பணம் கொடுக்கமாட்டார்கள். இவ்வழக்கில் எதிரியின் பெயரும், முகவரியும் புகார்தாரருக்கு தெரியாத நிலையில் ரூ.2,00,000/- பணம் கொடுத்ததாக கூறியுள்ளது பொய் என்றும், எதிரியின் சித்தப்பா முரளிக்காக கொடுத்த காசோலையை வைத்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. எதிரியின் தரப்பில், Y. Sreelatha @ Roja Vs Mukanohand Bothra என்ற முன்வழக்கை சுட்டிக்காட்டி விடுதலை செய்யும்படி கோரப்பட்டது.

14. பிரிவுகள் 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டம் கீழ் கண்டவாறு கூறப்பட்டுள்ளது. **Section 118 : Presumption as to negotiable instuments- Until the contrary is proved, the following presumptions shall be made:-**

a) of consideration - that every negotiable instrument was made or drawn for consideration, and that every such instrument, when it has been accepted, endorsed, negotiated or transferred, was accepted, endorsed negotiated or transferred for consideration.

b) as to date - that every negotiable instument bearing a date was made or drawn on such date:

c) as to time of acceptance - that every accepted bill of exchange was accepted within a reasonable time after its date and before its maturity;

d) as to time of transfer - that every transfer of a negotiable instrument was made before its maturity;

e) as to order of endorsements that the endorsements appearing upon a negotiable instrument were made in the order in which they appear thereon என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15. மேலும் மாற்றுமுறை ஆவணச்சட்டங்கள் சட்டம் பிரிவு 139 ஆனது கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. **Section 139: “Presumption in favour of holder - It shall be presumed, unless the contrary is proved, that the holder of a cheque received the cheque, of the nature referred to in section 138, for the discharge, in whole or in part,**

of any debt or other liability” இவ்வழக்கில் காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியுடையது அல்ல என்று எதிரியால் அதனை மறுத்து நிரூபிக்க ஆய்வுக்கு அனுப்பாத நிலையில், வழக்கு காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியுடையது என்று மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139 ன் கீழான அனுமானம் ஏற்படுகிறது. மேற்படி அனுமானத்தை மறுதளிக்க வேண்டியது எதிரியின் பொறுப்பாகும்.

16. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் அமர்வு வழங்கிய தீர்ப்புரையை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விளைகிறது. **T. Vasantha Kumar Vs Vijayakumari 2015(2) MLJ Cri 605(sc)** என்ற வழக்கில் “In the present case since the cheque as well as the signature has been accepted by the accused respondent, the presumption under section 139 would operate. Thus, the burden was on the accused to disprove the cheque or the existence of the legally recoverable debt or liability” அதாவது ஒரு காசோலையிலுள்ள கையெழுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு அது சட்டப்படியான கடனிற்கு வழங்கப்பட்டவை தான் என்ற துணிபு பிரிவு 139 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் ஏற்படும். அதை மறுத்து நிரூபிக்க வேண்டியது எதிரியின் பொறுப்பு என்று மேற்படி தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ளது. மேற்படி உச்சநீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் இவ்வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பத்தை எதிரி மறுத்து எவ்விதமான சாட்சியமும், வாதமும் முன் வைக்கவில்லை.

17. உச்சநீதிமன்ற தீர்ப்புரையான, **Kishan Rao Versus Shankargouder.(2018) 8 SCC165,** என்ற வழக்கில்**, NI Act-** “ Accused may adduce evidence to rebut presumption U/s 139. But mere denial regarding evidence of debt shall not serve any purpose. In the event accused is able to raise a probable defence which create doubt with regard to the existence of a debt or liability. The presumption may fall” என்று தெரிவித்துள்ளது. மேற்சொன்ன தீர்ப்புரையில் எதிரி புகார்தாரரின் வழக்கை வெறுமனே மறுத்தால் மட்டும் போதாது என்றும், தனது தரப்பு வழக்கானது நிகழக்கூடியது என்றும், இவ்வழக்கில் கூறப் பட்டுள்ள கடன் அல்லது கடன் பொறுப்பு குறித்தான சந்தேகத்தினை ஏற்படுத்தும் படியாக தனது வழக்கினை சாட்சியம் மூலமாக முன் நிறுத்தவேண்டும். அவ்வாறு முன்நிறுத்தினால் மட்டுமே புகார்தாரருக்கு சாதகமாக அனுமானம் மறுத்தளித்ததாக

கருதப்படும் என்று கூறப்பட்ட முன்தீர்ப்புரை இவ்வழக்கின் தன்மைகளோடு பொருந்துவதாக உள்ளது என்று நீதிமன்றம் கருதுகிறது.

18. இவ்வழக்கில் புகார்தாரரால், அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.த.சா.ஆ.3 எதிரியால் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுள்ளது. எதிரியிடம் இவ்வழக்கை குறித்து வினவியபோது, பொய் வழக்கு என்று மட்டுமே மறுத்துள்ளார். அதேபோல், புகார்தாரர் சாட்சிகள் முடிந்த பின்பு 351(b)ன் கீழ் எதிரியிடம் வினவியபோது, பொய் வழக்கு என்றும், புகார்தாரரிடமிருந்து தான் பணம் வாங்கவில்லை என்றும், அதனை நிரூபிக்கும்வகையில் தன்னிடம் போதுமான சாட்சிகள் உள்ளதென்று கூறியுள்ளபோதிலும், சாட்சியத்தை முன்னிலைப்படுத்தவில்லை என்பதால், நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது. மேற்கண்ட அனைத்தையும் பார்க்கும்போது வழக்கு காசோலையானது சட்டப்படியான கடன் அல்லது கடன் பொறுப்பிற்காக கொடுக்கப்பட்டட காசோலை இல்லையென்றும், பொய் வழக்கு என்று எதிரி தரப்பில் கூறியுள்ளது ஏற்புடையதாக இல்லை. எனவே வழக்கு காசோலை வா**.**சா**.**ஆ**.1** சட்டப்படியான செல்லத்தக்க கடன் அல்லது கடன் பொறுப்பிற்காக கொடுக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. எதிரியின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம், எதிரியின் பெயரோ, அவரது முகவரியோ, புகார்தாரருக்கு தெரியாது என்றும், எதிரியின் சித்தப்பா முரளி வாகனம் வாங்கும்போது, கொடுத்த காசோலையை வைத்து, புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதனைக் குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் பிரவின் குமார், த.பெ. சற்குணராஜ், எண். 156, விநாயகர் கோவில் முதல் தெரு, வண்ணாரப்பேட்டை, குன்னூர் என்று குறிப்பிட்டு அனுப்பியுள்ளார். வழக்கறிஞர் அறிவிப்பானது அஞ்சலகத் துறையால் எதிரி, பெற்றுக்கொள்ள மறுத்ததாக (Unclaimed) மேற்குறிப்பு செய்யப்பட்டு திருப்பப்பட்டுள்ளது. அதேபோல், புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பானது No Such Person என்ற காரணத்தினால் அஞ்சல் துறையினரால் திருப்பப்படவில்லை. அதே முகவரியைக் குறிப்பிட்டு, நிதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த வழக்கில் நிதிமன்றத்தால் அனுப்பிய அழைப்பாணையை எதிரி பெற்றுக்கொண்டு, நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எனவே எதிரியின் தரப்பில், புகார்தாரருக்கு எதிரியைப் பற்றி எந்த

விபரமும் தெரியாது என்று கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

20. எதிரியின் தரப்பில், இந்த வழக்கு காசோலையானது புகார்தாரரிடம் ரூ.2,00,000/- பணம் வாங்கிக்கொண்டு தரவில்லை என்றும், எதிரியின் சித்தப்பா முரளி என்பவர் வாகனம் வாங்கும்போது பிணைக்காக கொடுக்கப்பட்டது என்று கூறியுள்ளபோதிலும், அதனைக் குறித்து எதிரியின் சித்தப்பாவை சாட்சியாக விசாரித்து எப்பொழுது என்ன வாகனம் எவ்வளவு ரூபாய்க்காக வாங்கப்பட்டதென்றும், எதற்காக வழக்கு காசோலையானது புகார்தாரரிடம் கொடுக்கப்பட்டதென்று, தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை.

21. நமது மேலமை நீதிமன்றங்கள் பல முன்னோடி தீர்ப்புகளில் " The accused has to be provided with reasonable opportunities in order to rebut the presumptions in respect of the cheque in question, based upon which the criminal proceedings are initiated against him" என்று கூறியுள்ளது. ஆனால், மேற்படி உரிமைகளை எதிரி Delaying tactics மற்றும் Vexatious manner ஆக உபயோகிக்கக்கூடாது. உண்மையில், காசோலை வழக்குகள் quasi civil மற்றும் quasi criminal தன்மையுடையது. எதிரி காசோலையிலுள்ள தனது கையொப்பத்தை மறுக்கவும் இல்லை. காசோலை வழங்கப்பட்டதற்கான பொருண்மைகளையும் மறுக்கவும் இல்லை. மேலும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 139 மற்றும் 118 (a) ன் கீழான அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள போதும், மேற்படி சட்டப் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான கடன் மற்றும் கட்டுப்பாடு இல்லை என்பதை எதிரி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுதளித்து தனது தரப்பினை நிரூபிக்கலாம், ஆனால் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள அனுமானங்களை சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை சார்ந்த சாட்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் மறுதளிக்க எதிரி முன்வரவில்லை. எனவே, புகார்தாரர் தரப்பு வழக்கிடை சங்கதிகள் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பு வா.த.சா.ஆ.4 க்கு எதிரியின் தரப்பில் பதிலறிவிப்பு அனுப்பவில்லை. எதிரிக்கு எதிரான குற்றம் குறித்து பிரிவு 274 BNSS ன் கீழான விசாரணையின் பொழுது குற்றவாளி இல்லையென்று மட்டுமே மறுத்துள்ளார். புகார் மற்றும் வா.த.சா.ஆ.**1** வழக்கு காசோலையை பொறுத்த சங்கதிகள் வா.சா.1

சாட்சியத்தின் வாயிலாகவும், வா.த.சா.ஆ.**1** முதல் வா.த.சா.ஆ.**4** ஆவணங்கள் வாயிலாகவும், புகார்தாரர் நிரூபணம் செய்துள்ளதாலும், எதிரி Travel of the Cheque குறித்து போதிய அளவு சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையை சார்ந்த சாட்சிய கோட்பாடுகளின் வாயிலாக நிரூபணம் செய்யாததாலும், புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள அனுமானங்களை மறுதளிக்கதக்க சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக மறுதளித்து, மீண்டும் புகார்தாரர் மீது திருப்பாததாலும், வழக்கு காசோலையை பொறுத்து எதிரிக்கு சட்டப்படியான கடன் மற்றும் கட்டுப்பாடு உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை எண்.2 ஐ புகார்தாரருக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

23. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை எண்**(3)**</u>

<u>**3)** புகார்தாரர்**,** எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச்சட்டம்</u>

<u>பிரிவு **138** ன் கீழான குற்றத்தை நிரூபித்து இருக்கிறாரா**?**</u>

ஏற்கனவே, தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை எண் : (2) ஆனது புகார்தாருக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவுகள் 118 மற்றும் 139ன் கீழ் எதிரி முரண்பாடுகளை மெய்ப்பிக்கவில்லை. மெய்ப்பிக்கும் பொறுப்பானது புகார்தாரரின் மீது எதிரியால் மறுக்கத்தக்க சாட்சியங்கள் (Rebuttal Evidence) மற்றும் சாத்தியக் கூறுகள் (Probabilities) வாயிலாக திருப்பப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, வழக்கிடை காசோலைகளை பொறுத்து எதிரிக்கு எவ்வித சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு உள்ளதென்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பிரச்சனை எண்.2 ல் முடிவு செய்து விட்ட காரணத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை எண் 3 விற்கு கீழ்கண்டவாறு புகார்தாருக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

24. எனவே, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழ் காசோலை மோசடிக் குற்றம் புரிந்தவரென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இது அழைப்பாணை வழக்கு என்பதால் தண்டனை குறித்து விவரங்கள் பிரிவு 271(2) BNSSன் கீழ் எதிரியிடம் வினவியபோது, மேல்முறையீட்டில் பார்த்துக்கொள்வதாக கூறினார். இவ்வழக்கானது 2024ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி

சங்கதிகளை கருத்தில் கொண்டு புகார்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்க எதிரிக்கு உத்தரவிடுவதென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. **2004(1) CTC. 474 (SC) (Mangilal-Vs-State of M.P) It is decided that "Before awarding compensation U/ s.357 Cr.P.C, the question of compensation has to be necessarily asked"** என்ற முன்னோடி தீர்ப்பில் நமது மேலவை நீதிமன்றம் கொடுத்த வழிகாட்டுதலின் அடிப்படையில், நஷ்ட ஈடு குறித்து எதிரியிடம் வினவியபோது, மேல்முறையீட்டில் பார்த்துக்கொள்வதாக கூறினார்.

i) முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளியென இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 278 (2) BNSS ன் கீழ் எதிரிக்கு ஆறு (6) மாதகாலம் மெய்க்கவால் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறது.

ii) எதிரி இந்த தீர்ப்புரை பகரப்பட்டதிலிருந்து இரண்டு மாதக்காலத்திற்குள் (05.09.2026) ரூ.2,00,000/- ஐ பிரிவு 395(3) BNSS ன் கீழ் நஷ்ட ஈடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையை அடுத்தடுத்து அனுபவிக்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

iii) அபராதம் இல்லை.

25. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்து எந்த 5 உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 06 ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- திருமதி. க. அமிர்தம்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
கோத்தகிரி.

பின் இணைப்பு:

புகார்தாரர் தரப்பு சாட்சி:

புகார் தரப்பு சான்றாவணங்கள்:

1. பு.சா.ஆ.1-12.02.2024 தேதியிட்ட ரூ.2,00,000/-க்கான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, உதகமண்டலம் கிளைக்கான காசோலை எண் 346862 அசல்
2. பு.சா.ஆ.2- 15.02.2024 தேதியிட்ட மத்திய பேங்க் ஆப் பரோடா, கோத்தகிரி கிளையிலிருந்து குறிப்பாணை அசல்
3. பு.சா.ஆ.3- 29.02.2024 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட அசல்
5. பு.சா.ஆ.4- 12.03.2024 தேதியிட்ட எதிரி அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திருப்பிஅனுப்பப்பட்ட அஞ்சலக உறை மற்றும் ஒப்புதல் அட்டை அசல்

எதிரி தரப்புசாட்சிகள்: இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

ஒப்பம்/- திருமதி. க. அமிர்தம்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
கோத்தகிரி.

குறிப்புகள்

1. எதிரிக்கு தீர்ப்புரை நகல் வழங்கப்பட்டது.
2. வழக்கின் முடிவு புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.